No. of Printed Pages : **5**

**9091**

| பதிவு எண் Register Number | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|

# Part III — Vocational Subjects

# வேளாண் அறிவியல்

# AGRICULTURAL SCIENCE

( தமிழ் வழி / Tamil Version )

கால அளவு : 3.00 மணி நேரம் ]  [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிப்பில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** கிழங்கு வகைப் பயிர்களுக்கு __________ மண் ஏற்றது.

(அ) செம்மண்  (ஆ) வண்டல்

(இ) மணற்சாரி  (ஈ) களிமண்

**2.** ஓர் எக்டருக்கு தேவையான ஒரு பரு கரும்புக் கரணைகளின் அளவு __________.

(அ) 50,000  (ஆ) 1,50,000

(இ) 25,000  (ஈ) 75,000

**3.** சோற்றுக்கற்றாழையில் __________ என்ற குளுகோஸைடு கூட்டுப் பொருள் உள்ளது.

(அ) அலோயின்  (ஆ) கோல்சிசின்

(இ) நிம்பிடின்  (ஈ) சூப்பர்பின்

[ திருப்புக

4. மா __________ வருடங்களுக்கு ஒரு முறை கவாத்து செய்யப்படுகிறது.

(அ) நான்கு (ஆ) இரண்டு

(இ) ஐந்து (ஈ) மூன்று

5. வளிமண்டல தழைச்சத்தை வேர் முடிச்சுகளில் நிலைநிறுத்தச் செய்யும் பாக்டீரியா __________.

(அ) பேசில்லஸ் (ஆ) அசோஸ்பைரில்லம்

(இ) ரைசோபியம் (ஈ) அசட்டோபாக்டர்

6. ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பயன்படுத்தப்படும் இயந்திர முறைகள் __________.

(அ) இனக்கவர்ச்சிப் பொறி (ஆ) ஒட்டுப்பசைப்பொறி

(இ) விளக்குபொறி (ஈ) இவை அனைத்தும்

7. __________ அயல் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் நடமாடும் இடுபொருளாக பயிர் சாகுபடியில் பங்கெடுக்கிறது.

(அ) மீன் வளர்ப்பு (ஆ) தேனீ வளர்ப்பு

(இ) பறவை வளர்ப்பு (ஈ) வேளாண் காடுகள் வளர்ப்பு

8. வெள்ளை நிற அடையாள அட்டை __________ விதைக்குரியது.

(அ) ஆதார (ஆ) கரு

(இ) சான்றளிக்கப்பட்ட (ஈ) வல்லுநர்

9. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் __________ சதவீத நீரை சேமிக்கலாம்.

(அ) 30 - 35 (ஆ) 10 - 20 (இ) 40 - 60 (ஈ) 20 - 30

10. களைகளை சேகரித்து எரித்து சாம்பலாக்கி நிலத்தில் தூவுதல் __________ எனப்படும்.

(அ) அடியுரம் (ஆ) மேலுரம்

(இ) டாப்பிங் (ஈ) பெப்பரிங்

11. ‘உழவர்களின் நண்பன் __________’.

(அ) அந்துப்பூச்சி (ஆ) வண்டு

(இ) தட்டான் (ஈ) மண் புழு

**12.** காற்று புகாக் கலன் __________.

(அ) தகர டின் (ஆ) சணல்பை

(இ) துணிப்பை (ஈ) காகிதப்பை

**13.** மூலதனச் சந்தையில் _________ விற்கப்படும்.

(அ) பங்குகள் (ஆ) உரம்

(இ) விளைபொருள் (ஈ) விதை

**14.** பாலில் உள்ள __________ ஐ அழிக்க பாஸ்ச்சுரைசேசன் செய்யப்படுகிறது.

(அ) பூசணம் (ஆ) வைரஸ்

(இ) புரோடோசோவா (ஈ) பாக்டீரியா

**15.** மனிதனின் புதியதொரு இன்றியமையாத தேவை __________.

(அ) இருப்பிடம் (ஆ) உணவு

(இ) தகவல் (ஈ) உடை

## பகுதி - II / Part - II

**குறிப்பு : எவையேனும் 10** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **28 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **10x3=30**

**16.** தமிழ்நாட்டில் காணப்படும் பட்டங்களையும், பயிரிடப்படும் பயிர்களையும் எழுதுக. (ஏதேனும் மூன்று)

**17.** நெல் சாகுபடியில் பின்பற்றப்படும் நாற்றங்கால் வகைகள் யாவை ?

**18.** வாழையில் வளர்ச்சி ஊக்கி தெளிக்கும் முறையினை எழுதுக.

**19.** நுண்ணுயிர் உரங்கள் - குறிப்பு வரைக.

**20.** பயிர் பாதுகாப்பின் அடிப்படை கொள்கைகள் யாவை ?

**21.** குறிப்பு வரைக : செங்குத்துத் தோட்டம்

**22.** அங்ககச் சான்றிதழ் என்றால் என்ன ?

[ திருப்புக

23. ஒழுங்குமுறைச் சந்தை என்றால் என்ன ?

24. காளானின் மருத்துவ குணங்கள் யாவை ?

25. அறுவடை பின் நேர்த்தியின் செயல்முறைகள் யாவை ?

26. கால்நடைகளைத் தாக்கும் நோய்களின் வகைகள் யாவை ?

27. வலவரில்லா வானூர்தியால் (டிரோன்) விவசாயிக்கு என்ன பயன் ?

28. தரமான விதையின் பண்புகள் யாவை ?

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் 5** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **35 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **5x5=25**

29. ஒளிகாலத்துவத்தைப் பொருத்து தாவரங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன ?

30. காய்கறிப் பயிர்களின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.

31. வல்லுநர் விதை, ஆதார விதை - வேறுபடுத்துக.

32. அங்கக வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்யும் உத்திகள் யாவை ?

33. மதிப்பு கூட்டுதலின் அவசியம் பற்றி குறிப்பிடுக.

34. தேயிலை வாரியம் பற்றி எழுதுக.

35. தேனீ கூட்டுக் குடும்பம் பற்றி குறிப்பு எழுதுக.

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு :** கீழ்கண்ட வினாக்களுக்கு **இரண்டு பக்க** அளவில் விடையளிக்கவும். **2x10=20**

**36.** (அ) மஞ்சள் சாகுபடி செய்யும் முறையை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நன்செய் நிலத்திற்கான மாதிரி திட்டத்தினை விளக்குக.

**37.** (அ) (i) செங்குத்துத் தோட்டம் அமைப்பதற்கான வளர்ப்பு ஊடகத்தின் பண்புகள் யாவை ?

(ii) செங்குத்துத் தோட்டத்தின் நன்மைகள் யாவை ?

**அல்லது**

(ஆ) மாடுகளைத் தாக்கும் ஏதேனும் ஐந்து நோய்களின் அறிகுறிகள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகளை எழுதுக.

**- o 0 o -**